தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இந்திய பயிர்பதன தொழில்நுட்ப நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தற்பொழுது இயங்கிவரும் 17 தனியார் உறுப்பு வேளாண்மைக் கல்லூரிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தனியார் கல்லூரிகளுக்கான நடைமுறைக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையாக இயங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், மேற்குறிப்பிடப்பட்ட தனியார் வேளாண்மைக் கல்லூரிகளின் தாளாளர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோருக்கிடையே முத்திரைத்தாளில் 10-3-2016 முதல் 30-3-2016 வரை அட்டவணைப்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறே நேற்று (30-3-2016) தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய உணவு பதனத் துறை அமைச்சகத்தின் கீழ்நடத்தப்பட்டு வரும் இந்திய பயிர்பதன தொழில்நுட்ப நிலையத்தின் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் ஆகியோருக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழக இணைப்பதிவாளர் முனைவர் க. கோபால்சாமி அவர்கள், துணைப்பதிவாளர் மற்றும் இதர அலுவலர்களும் உடன் இருந்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்